.

## தமிழால் முடியும்!...
***************

நியூயார்க்கில் வாழ்கின்ற நேர்த்திமிகு தமிழர்களே!
தயாராகக் கவிகேட்டுக் கைதட்டும்(இலங்கை)_மன்னர்களே!
என்கூடப் பங்கேற்கும் என்னருமைக் கவிஞர்களே!
பொன்னான தலைவர்அய்யா!".பொன்தமிழால் முடியும்"என்று
கவிசொல்லி உலகுசுற்றும் வாலிபத் தலைவரய்யா!
(உமக்கெல்லாம்,)-
வாழைப்பூ குனிந்ததுபோல் வணக்கம்சொல்லித் தொடங்குகின்றேன்!

..

<u>பெட்னா அரங்கம்..</u>
பத்தொன்பதாம் கன்னிவயதில் படிஎடுத்து வைத்துஇன்று
முத்தமிழால் முடியுமென்று தமிழ்மூத்த அறிஞர்களைத்
தமிழகக் கடலின்றும் தருவிக்கும் "பெட்னாவை"
தமிழில் இன்பம்தந்தே சாதிக்கும் பேரவையை
மனமார வாழ்த்திவிட்டே மகிழ்வுடன் தொடங்குகின்றேன்!

<u>தலைவர் இலந்தையார்;;</u>

(தமிழ்நாட்டின் எம் திருநெல்வேலியில்)--
..
இலந்தைக் குளம்தந்த கவிதைமுத்தே!
..எமதுசந்த வசந்தத்தின் மொத்த சொத்தே!
வலம்வருவாய் வினாயகரை,தொடங்கும் போது!
..வார்த்தையால்நீ கொட்டும்போதோ தேன்+கள் மோதும்!
நலம்விளைத்தாய்!நூல்படைப்பாய்!தமிழ்மங் கைக்கே!
..நல்-இலக்க.ண-மாலையும் அணிவித் தாயே!
பலம்கொடுக்கும் தேன்சுளைபோல் (உன்)கற்ப னையால்
,,பாடலுக்கே விருந்தளிக்கும் இலந்தை!(நீ) வாழ்க!

***********தமிழால் முடியும்!--****************
ஆம்!தமிழால் முடியும்!

சிங்கத்தால்  வனம்முழுதும் கோலோச்ச முடியும்!,
..சிறந்ததமிழ் இலக்கியத்தால் புவிவீழ்த்த முடியும்!-ஒரு
தங்கத்தால் அகிலமெலாம் சுற்றிடவே முடியும்!,
....தனித்தமிழால் உலகமெல்லாம் பவனிவர முடியும்!
..
சம்பந்தக் குழந்தையின் 'அம்மா!"( என்ற.ஓர்)-சொல்-சக்தியின்
..தாய்ப்பாலைத் தரவைத்துப் பாப்பாட வைக்கலையா?
நம்காரைக் காலம்மை" மாங்கனிதா!" என்றசொல்லே
..நற்கனியை வரவழைத்தே அவள்-புனிதம் சொல்லலையா?
..
அப்பரது சூலைநோய் தமிழ்ப்பாட்டால் தீரலையா?-நம்
.அப்பன் பாரதி- தமிழ்ப்பாட்டால் வெள்ளையர்கள் நடுங்கலையா?-(அவர்தம்)-
பெண்விடுத லைப்பாடல்களே தமிழ்மங்கைக்கு எழுச்சிதந்து,
இன்றைய கவிதாவும் பிறபெண்ணும் இங்குவந்தே பணியாற்றலையா?
..
மாங்கனியும், பலாச்சுளையும் நாக்குக்கு விருந்தென்றால்,
..மணக்கும்கவி பாரதிசொல் உலகுக்கே விருந்தாகும்!
தேங்காய்,பூ அர்ச்சனைகள் இறைவனை மகிழ்த்துமென்றால்,
..தேவாரம், திருவாசகம் இறைவனைநேரில் வரவழைக்கும்!
..
திருக்குறளால் உலகுக்கே தருமம்பற்றிச் சொலமுடியும்!(அதனால்தான்)-
..தெய்வநூல் அது-எனஅறிந்து பலமொழியில் பவனிவரும்-அது!
பாரதியின் சொல்லிலெல்லாம் மந்த்ரசக்தி கொலுவிருக்கும்!(அதனால்தான்)
..பலமொழியில்,லத்தீனில் மொழிபெயர்ந்துச் சொக்கவைக்கும்(அவன்பாடல்)-
..
கம்பனது பாடல்களால் இராமபக்தி தரமுடியும்!
..காளமேக வரிகளினால் காளிசக்தி பெறமுடியும்!
உம்பர்களே போற்றுகின்ற அருணகிரி திருப்புகழால்
..உயர்முருகக் கடவுளைஇன்றும் ஆடவைக்க முடியும்!
..
அவ்வையார் பாடல்கள்தாம் அரசர்களையே இணைத்ததுவாம்!
..அழகுசுந்தரர்பா சிவன்நெருங்கி நட்புகொள வைத்ததுவாம்!
கோளறு பதிகங்கள் கெட்டக்ரகம் ஓடவைப்பதாம்!
..குளிர்ந்தசாம்பலை சம்பந்தர்பா பெண்-ஆக்கி வியந்ததாம்!
..

கல்தூணை எம்-தமிழ்ப்பாதான் மிதக்கவே வைத்ததாம்!
..காசுகளை (சுந்தரர்பாடல்) வேற்றூரில் கொண்டுவந்து தந்ததாம்!
பொல்லாத நரிகளையே குதிரைகளாய்  மாற்றியதாம்!
..பூ-நாகம் கடித்தவனை(அப்பர்பாடல்) மீண்டுவரச் செய்ததாம்!
..
முடியும் சிலிர்க்கும் படிநம் தமிழால் முடியும்!
முடிவேந் தரையும் தலைதாழ்த் திடவே முடியும்!
படியாத் திமிர்கொள் பணக்கார னையும் கடியும்

படிநம் தமிழ்ச்சொல் செயலை உலகே அறியும்!
..
வெல்லுதமிழ் நாவில்வரின் பாவமெலாம் ஓடும்!
தொல்லைஎன வந்தஇருள் அகன்றுநலம் கூடும்!
எல்லையிலே நிற்குமருள் நெஞ்சில்சுதி போடும்!
முல்லைஎன 'ஆத்மஒளி' பொங்கிஇசை பாடும்!
..
கம்பனை,நம் வள்ளுவனை, பாரதியைத் தேர்வீர்!
நம்பிய,நம் இறைவனது நெஞ்சில்இணை சேர்வீர்!
வம்புசொல்லி நம்வாழ்வை வீணாக்க லாமோ?
தெம்புடனே தமிழ்கற்றே அன்புசெய்து வாழ்வீர்!

********************வணக்கம்,நன்றி!************(கவியோகி வேதம்)அமெரிக்கா-02-07-06